| | | | |
|---|---|---|---|
| 19.08.2021 | அசல் வழக்கு எண்.126/2019 | வா.சா.1 | திரு.ஈஸ்வரன்<br>க/பெ.ஆறுமுகம் |

சாட்சி மீண்டும் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை - (வாதி தரப்பில்)

நான் 3-ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் கட்டிட வேலை செய்கிறேன். என் மனைவி வீட்டுக்குடித்தனம் என்னுடன் வேலைக்கு வருவார் . நான் கட்டிட வேலை காண்ட்டிராக் எடுத்தும் செய்வேன் கூலி வேலைக்கும் செல்வேன் . நான் கட்டிட வேலை காண்ட்டிராக் எடுத்து செய்வதாக சொல்வது பொய் என்றாலும் , நான் கூலி வேலைக்கு மட்டும் தான் செல்கிறேன் என்றாலும் , சரியல்ல. என் வீடு சொந்த வீடாகும் . அதன் விஸ்தீரனம் 400 சதுர அடி. புறம்போக்கு இடத்தில் வீடு கட்டியிருக்கிறேன் . எனக்கு 2 குழந்தைகள் பெண் ஒன்று , பையன் ஒன்று . என் பையன் பாலிடெக்னிக் படித்து இந்த வருடம் முடித்துவிட்டார். என் பெண் காலேஜ் 1 வருடம் சென்றார். அவருக்கு திருமணம் முடித்து வைத்திருக்கிறேன். என் பிள்ளைகளை 12 ம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் தான் படிக்க வைத்தேன். பிரதிவாதி டிபன் கடை வைத்திருக்கிறார் . நான் அங்கு சாப்பிட செல்லும் வகையில் பிரதிவாதி எனக்கு பழக்கம் . நான் **Hero Passion Pro** வண்டி வைத்திருக்கிறேன். அதை தவிர வேறு எந்த வாகனமும் இல்லை . இதற்கு முன்பு நான் யாருக்கும் கடன் கொடுத்து வசூல் செய்ததில்லை . இதற்கு முன்பு கடன் கொடுத்து வாங்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்றால் , சரி. சிறுகச்சிறுக சேர்த்து வைத்திருந்த பணத்தை பிரதிவாதிக்கு கொடுத்தேன் . பிரதிவாதியின் கடைக்கு சாப்பிட போகும் வகையில் தான் பழக்கமா என்றால் , பிரதிவாதியின் தகப்பனார் என் சின்னம்மாவிற்கு தூரத்து சொந்தம் . பிரதிவாதி எனக்கு சொந்தம் என்பதை என்னுடைய வழக்கிலோ முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் , சரிதான். பிரபாகரன் என்பவர் என்னுடைய சித்தப்பா மகன். அதாவது என் தகப்பனாரின் தம்பி மகன் . அந்த பிரபாகரன் தான் பிரதிவாதிக்கு வீடு கட்டிக் கொடுத்தார் என்றால், சரிதான். அப்படி வீடு

கட்டிக் கொடுத்த வகையில் பிரபாகரனுக்கும் , பிரதிவாதிக்கும் இடையே கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை ஆனதென்றால் அது பற்றி எனக்கு தெரியாது . பிரதிவாதியின் வீட்டிற்கு நான் வேலை செய்ய போனதில்லை . பிரபாகரன் என்னிடம் வீடு கட்டிய வகையில் பிரதிவாதியுடன் பிரச்சனை என்று என்னிடம் சொன்னதில்லை . நான் கேள்விப்பட்டேன். யார் சொல்லி நான் கேள்விப்பட்டேன் என்றால் , அந்த பகுதியில் உள்ள மக்கள் சொல்லி கேள்விப்பட்டேன். அந்த நபர்கள் யார் என்றால், பெயர் சொல்ல முடியாது. பிரதிவாதிக்கும், பிரபாகரனுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது எனக்கு நேரடியாக தெரியும் என்றாலும், அதனால்தான் அந்த நபர்களின் பெயர்களை என்னால் சொல்ல முடியவில் லை என்றாலும், சரியல்ல. பிரபாகரன் பிரதிவாதியின் வீட்டை கட்டிய சமயத்தில் என்னை வேலைக்கு அங்கே அழைத்துச் சென்றார் என்றால் , தவறு. அங்கே நான் போனதே இல்லை . பிரதிவாதியின் வீட்டிற்கு போயிருக்கிறேன் . ஆனால், அவர் கட்டிடத்திற்கு வேலைக்கு போனதில்லை . பிரதிவாதிக்கும், பிரபாகரனுக்கும் இடையே உள்ள பிரச்சனையில் அவர்கள் பேசி தீர்த்துக்கொண்டார்களா என்றால், எனக்கு தெரியாது. அதை பற்றி நானும், பிரபாகரனிடம் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. கடன் கொடுத்ததாக சொல்லும் சமயத்திற்கு முன்பே பிரதிவாதிக்கும் பிரபாகரனுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதா என்றால், எனக்கு தெரியாது. நான் வருமான வரி கட்டுவதில்லை. 7 1/2 இலச்ச ரூபாய் பணத்தை ஒரே தவணையாக கொடுத்தேனா , பிரித்து கொடுத்தேனா என்றால், மொத்தமாக கொடுத்தேன். என்னிடம் பணம் கேட்ட உடனே கொடுத்துவிட்டேனா என்றால், பணம் ஒரு மாதம் கழித்து கொடுத்தேன் . வீட்டு லோன் கிடைத்தால் கொடுப்பதாக சொன்னேன். அது கிடைக்காததால் அடமானம் வைத்துக்கொடுத்தேன். நான் பணத்தை சிறுசேமிப்பாக வைத்திருந்தேன். குழந்தைகளின் படிப்பிற்காக வைத்திருந்தேன். ஐந்து வருடங்களுக்கும் மேலாக சேமித்து வைத்திருந்தேன். அந்த பணத்தை வீட்டிலேயே வைத்திருந்தேனா என்றால், சீட்டு போட்டு அதிலிருந்து வாங்கி வைப்பேன். யார் யாரிடம் சீட்டு போட்டேன் அவர்களை சாட்சியாக விசாரிக்கலாமா என்றால் , மைசூரில் இருக்கிறார்கள், பெயர் தெரியாது. நான் உண்மையாகவே சீட்டு போட்டிருந்தால் அந்த நபர்களின் பெயர்களை என்னால் சொல்ல இயலும் என்றாலும், அவ்வாற இல்லாததாலும் அந்த நபர்களின் சொல்ல இயலவில்லை என்றாலும் , தவறு. 2016 நவம்பர் மாதத்தில் பழைய ரூபாய் நோட்டு செல்லாது என்று அறிவித்தார்கள் என்றால் , தெரியும். அந்த சமயத்தில் நான் 7 1/2 இலட்சம் ரூபாய் நான் வைத்திருந்தேனா என்றால், 7 1/2 இலட்சம்

அப்பொழுது வைத்திருக்கவில்லை. 2 இலட்சம் ரூபாய் பக்கம் வைத்திருந்தேன். அதனை மாற்றி விட்டேன். அந்த 2 இலட்ச ரூபாய் பணத்தை வங்கியில் கட்டி மாற்றிவிட்டேன் . எந்த வங்கியில் அவ்வாறு மாற்றினேன் என்றால் , ஆதார் கார்டு கொடுத்து மாற்றினேன் . கொஞ்சம் கொஞ்சமாக எல்லா வங்கியிலும் கொடுத்து மாற்றினேன் . எந்தெந்த வங்கி என்று என்னால் சொல்ல இயலாது என்றால் , சரிதான். நான் கார்ப்ரேசன் வங்கி மேட்டுப்பாளையம் கிளையில் வங்கிக் கணக்கு வைத்திருக்கிறேன் . சிறுது சிறிதாக சேமித்தாக சொல்லும் பணத்தை ஏன் வங்கியில் போடவில்லை என்றால் , டெப்பாசிட் செய்து வைத்திருந்தேன் . கடன் கொடுத்ததாக சொல்லும் நாளைக்கு முன்பு 5 வருடத்தையே கணக்கு எடுத்து பார்த்தால் , இந்த விவரங்கள் தெரிய வருமா என்று கேட்டால், பிக்சடு டெபாசிட் போட்ட பணத்தை எடுக்க முடியாது . ஒரு 2 அல்லது 3 இலட்ச ரூபாய் பிக்சடு டெபாசிட் போட்டேன் . என் சம்சாரத்தின் பெயரிலும் , என் குழந்தைகளின் பெயரிலும் பிக்சடு டெபாசிட் போட்டேன் . அதனை வீட்டில் வைத்திருக்கிறேன். அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும் . 7 1/2 இலட்ச ரூபாய் என்னுடைய வீட்டில் வைத்து கொடுத்தேன். வா.சா 1 கடனுறுதிச் சீட்டை எழுதியது கார்த்தி என்பவர் ஆவார். கார்த்தி என்பவர் என்னுடைய மாமா பையனா என்றால், அவர் எனக்கு தூரத்து சொந்தம் . வா.சா. 1 கடனுறுதிச் சீட்டில் கண்ட கிருஷ்ணசாமி என்பவர் கார்த்தியின் தகப்பனார். அவர்கள் இருவரும் காட்டுர் காமராஜர் நகரில் இருக்கிறார்கள் . அவர்கள் வீட்டிலிருந்து பிரதிவாதி வீடு சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது . பிரதிவாதி வீட்டிற்கு அவர்கள் எதற்கு வந்தார்கள் என்றால் , அவர்கள் அங்கே வேலைக்கு போவதற்காக வருவார்கள். நான் கடன் கொடுக்கப் போவதாக இருந்த விஷயம் கிருஷ்ணசாமிக்கும், கார்த்திக்கும் முதலிலேயே தெரியாது . அவர்கள் என் வீட்டிற்கு வந்தார்கள். பிரதிவாதியும் என் வீட்டிற்கு வந்தார். கிருஷ்ணசாமிக்கும், கார்த்திக்கும் பணம் கொடுத்த போது சாட்சி கையெழுத்து போட்டார்கள். கடன் கொடுத்த போது, என் வீட்டில் என் மனைவி இருந்தார் . பிரதிவாதி என் வீட்டிற்கு கடன் வாங்க வந்தபோது , அவர் தனியாகத்தான் வந்தார் அவருடன் வேறு யாரும் வரவில்லை . பிரதிவாதி என் வீட்டில் வைத்தோ, அல்லது வேறு எந்த இடத்தில் வைத்தோ என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றால், தவறு, கடன் வாங்கினார். நான் பிரதிவாதி கடன் வாங்கியதாக சொல்லும் தேதியிலோ, அல்லது வேறு எந்த தேதியிலோ பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றால், சரியல்ல. கார்த்தி 8 வதோ 10 வதோ படித்திருக்கிறார்.

எத்தனாவது படித்திருக்கிறார் என்று சரியாக தெரியவில்லை . கார்த்திக்கு ஏற்கனவே கடனுறுதிச்சீட்டு எழுதி பழக்கம் இருக்கிறதா என்றால், எழுதத் தெரியுமா என்று கேட்டேன், எழுத தெரியும் என்று சொன்னார். வா.சா.1 கடனுறுதிச் சீட்டை யார் வாங்கி வந்தார் என்று கேட்டால் பிரதிவாதி வாங்கி வந்தார் . கடனுறுதிச் சீட்டில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு ஞாபகமில்லை. அத்தாட்சியாக எழுதப்பட்டது. வா.சா.1 ல் கண்ட தேதியில் கடன் எதுவும் கொடுக்கப்படவில்லை என்பதால் தான் அதில் கண்ட சங்கதிகளை என்னால் சொல்ல இயலவில்லை என்றால், சரியல்ல. வா.சா. 1 ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளதா, தமிழில் எழுதப்பட்டுள்ளதா என்றால் , தமிழில் தான் எழுதப்பட்டுள்ளது. பிரதிவாதி கடனுறுதிச் சீட்டில் அந்த தேதியிலேயே அதாவது 20.02.2018 ல் கையெழுத்து போட்டார் . கையெழுத்து போட்டு பிறகு பணம் கொடுத்தேனா என்றால், பணம் வாங்கிக்கொண்டு தான் கையெழுத்து போட்டார் . பிரதிவாதி காலை 9.00 மணிக்கு சொன்ன தேதியில் என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றாலும். கடனுறுதிச் சீட்டில் கையெழுத்து போடவில்லை என்றால் , சரியல்ல. அந்த சமயத்தில் கிருஷ்ணசாமியும், கார்த்திக்கும் அங்கே வந்தார்கள், கடனுறுதிச் சீட்டை எழுதி கையெழுத்து போட்டார்கள், என்று சொல்வதும் பொய் என்றால், சரியல்ல. அங்கே வந்தார்கள், கடனுறுதிச் சீட்டை எழுதினார்கள். என் சித்தப்பா மகன் பிரபாகரன் வா.சா.1 கடனுறுதிச் சீட்டை போலியாக தயாரித்து என் மூலம் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் , சரியல்ல. நான் வங்கியில் வைப்பீட்டு தொகை வைத்திருப்பதாக சொல்வது பொய் என்றால் , சரியல்ல. வைத்திருக்கிறேன். 2016 ஆம் ஆண்டில் பண மதிப்பிழப்பிற்கு பின்பு நான் 7 1/2 இலட்ச ரூபாய் புதிய நோட்டுகளாக வைத்திருந்தது பொய் என்றால் , சரியல்ல. அந்த சமயத்தில் 7 1/2 இலட்ச ரூபாய் வைக்கவில்லை. 2016 க்கு முன்பு 2 அல்லது 3 இலட்ச ரூபாய் தான் அந்த சமயத்தில் வைத்திருந்தேன். வா.சா. 1 கடனுறுதிச் சீட்டு மூலமாக பிரதிவாதிக்கு எந்த வித மறுப்பும் ஏற்படவில்லை என்றால், சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியிலிருந்து எத்தனை நாட்களில் பிரதிவாதி வீடு கட்டி முடித்தார் என்றால் , சுமார் 8 மாதங்களுக்கு மேலிருக்கும். சுமார் 10 மாதத்தில் முடித்திருப்பார்களா என்றால், இருக்கும். வா.சா. 2 செட்டில்மெண்ட் ஆவணம் 16.07.2018 தேதியில் தான் பிரதிவாதியின் தாயார் அவருக்கு எழுதிக்கொடுத்திருக்கிறார் என்றால் , சரிதான். அந்த ஆவணத்தில் காலி இடம் தான் தானமாக கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது என்றாலும், வீடு இருப்பதாக

அதில் காண்பிக்கப்படவில்லை என்றாலும் , சரிதான். என்னிடம் கடன் வாங்கி 10 மாதங்களில் பிரதிவாதி வீடு கட்டி முடித்தார் என்று சொல்வது பொய் என்றாலும் , தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்பட்ட பிறகு தான் வெளியே கடன் ஏற்பாடு செய்து , அவர் வீடு கட்டி முடித்தார் என்றாலும் , சரியல்ல. வா.சா.2 தான செட்டில்மெண்ட் பத்திரம் எனக்கு எவ்வாறு கிடைத்ததென்றால், நகல் போட்டு எடுத்தேன். வழக்கு போடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு எடுத்தேன். பிரபாகரன் என்னுடைய சொந்த சித்தப்பா மகன் என்பதை நான் என் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் , சரியல்ல சொல்லியிருக்கிறேன். பிரபாகரனுக்கும் பிரதிவாதிக்கும் வீடு கட்டுவதில் பிரச்சனை ஏற்பட்டு பிரபாகரன் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் , தெரியாது. அறிவிப்பு அனுப்பி வழக்கு போட்ட விவரம் எனக்கு தெரியாது . என் அண்ணண் பிரபாகரன் 14.01.2019 ம் தேதியிட்டு பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றாலும், அதில் 13 இலட்ச ரூபாய் பாக்கி கொடுக்க வேண்டும் என்றும், கூறியிருந்தார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது . நான் எந்த வழக்கறிஞர் வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேனோ , அதே வழக்கறிஞர் வைத்து தான் இந்த அறிவிப்பை பிரபாகரர் அனுப்பியிருக்கிறார் என்றால் ,எனக்கு தெரியாது . அதற்கு தகுந்த பதில் அறிவிப்பை பிரதிவாதி அனுப்பிவிட்டார் என்றாலும் அதற்கு பிறகு பிரபாகரன்எந்த வழக்கும் தாக்கல் செய்யாமல் இந்த வழக்கை என்னை வைத்து தாக்கல் செய்துவிட்டார் என்றால், பிரபாகரனுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை . பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நானும் , பிரபாகரனும் தவறான சங்கதிகளைச் சொல்லி இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டோம் என்றால் , சரியல்ல. வா.சா.1 ல் கண்ட கையெழுத்து , அதிலுள்ள வாசகங்கள் மற்றும் தேதி அனைத்தும் பொய்யானவை என்றால், சரியல்ல. உண்மையானவைதான். நானும் எனது மனைவியும் கூலி வேலைக்கு போகிறோம் என்றாலும் , அந்த நிலையில் 7 1/2 இலடச ரூபாய் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக நான் சொல்வது பொய் என்றால் , சரியல்ல. புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டியதற்கு பட்டா கேட்டு மனு தாக்கல் செய்திருக்கிறேன் . பட்டா இன்னும் வரவில்லை. ஆரம்பத்திலிருந்து இன்று வரை நான் அந்த புறம்போக்கு இடத்தில் தான் இருக்கிறேன். நானே இடம் வாங்க வசதியில்லாமல் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி இருக்கிறேன் என்றாலும் , பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதிவாய்ப்பு இல்லை என்றாலும், சரியல்ல. பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும்

நிலையில் அவரிடம் வட்டி வாங்கினேனா என்றால் , ஒரு மாதம் கூட வட்டி கொடுக்கவில்லை. லோன் வாங்கி தருவதாக சொன்னார் . 100 க்கு ஒரு ரூபாய் வட்டி என்றால், மாதம் ரூ.7500 வட்டி ஆகும். அவரிடம் மாதா மாதம் வட்டி கொடுக்காததால் வட்டி கேட்டு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் , இல்லை. இரண்டு வருடங்களாக பணம் கொடுக்காததால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக அறிவிப்பு அனுப்பினேனா என்றால், இல்லை. நேரில் போய் கேட்டேன். இன்று நாளை என்று காலம் கடத்திவிட்டார். வழக்கு தாக்கல் செய்ய நீதிமன்றத்திற்கு எவ்வளவு பணம் கட்டினேன் என்றால் , ஞாபகமில்லை. பிரபாகரன் தான் இந்த வழக்கிற்கு நீதிமன்ற கட்டணம் கட்டி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றாலும் , அதனால் தான் நீதிமன்ற கட்டனம் கூட எவ்வளவு கட்டியிருக்கிறேன் என்றால் , சரியல்ல. கார்ப்ரேசன் வங்கியில் நான் எவ்வளவு நகைக் கடன் வாங்கியிருக்கிறேன் என்றால் , நகைக்கடன் வாங்கவில்லை . வெளியே எதாவது கடன் வாங்கியிருக்கிறேனா என்றால் , இல்லை. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க உரிமை இல்லை என்றாலும் , வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் , தவறு. கடன் வாங்கியதாக சொல்லும் தேதியிலிருந்து அவர் அம்மா செட்டில்மெண்ட் செய்து கொடுத்த தேதிவரை ஏன் கட்டிடம் கட்டவில்லை என்று நான் போய் கேட்டேனா என்றால், கட்டிடம் கட்டிக்கொண்டு தான் இருந்தார்கள் . கடன் வாங்கிவிட்டு வட்டியோ அசலோ கொடுக்க மறுக்கிறார் என பஞ்சாயத்தார் மூலம் எதாவது கேட்டேனா என்றால் , இல்லை. அவர் அப்பா எனது உறவினர் என்ற முறையில் அவரையாவது அழைத்து கேட்டேனா என்றால், கேட்கவில்லை. நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தேதிக்கு பிறகு அவர் வீடு கட்டியதாக சொல்வது பொய் என்றாலும் , அதை நான் போய் பார்த்தேன் என்றால், சரியல்ல. மொத்தமாக ரூ.906000 தொகை கேட்டு வழக்கு தாக்கல் புரிந்திருக்கிறேன். வழக்கு தாக்கல் செய்யும் பொழுது வட்டி ரூ .156000. பிரபாகரன் தான் பிரதிவாதிக்கு வீடு கட்டிக்கொடுத்தார் , அந்த சமயத்தில் அந்த கட்டிடத்தில் பிரபாகரனை சென்று பார்த்தேனா என்றால் , பார்ப்பேன். அந்த சமயத்தில் பிரதிவாதி கடன் வாங்கிக்கொண்டு அசலும் தரவில்லை , வட்டியும் தரவில்லை என்று பிரபாகரனிடம் சொன்னேனா என்றால், சொல்லவில்லை. உண்மையாகவே பிரதிவாதி கடன் வாங்கியிருந்தால், பிரபாகரனிடம் அவர் கடன் வாங்கிவிட்டு வட்டியும் தரவில்லை , அசலும் தரவில்லை என்று சொல்லியிருப்பேனா என்றாலும், பிரதிவாதி என்னிடம்

**அவ்வாறு கடன் ஏதும் வாங்காததால் தான் பிரபாகரனிடம் நான் எதுவும் கூறவில்லை என்றாலும், சரியல்ல.**

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/- S. Indulatha**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

**SUB COURT, METTUPALAYAM**